கின்றன. 40 மரங்கள் எட்வர்டு எலியட்ஸ் சாலையிலே நடப்பட்டிருக்கின்றன. 6 மரங்கள் ஆற்காடு சாலையிலே நடப்பட்டிருக்கின்றன. எங்கெங்கு வாய்ப்பும் வசதியும் இருக்கிறதோ. அங்கங்கு மரங்கள் நடப்படுகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், பெர்லின் போன்ற பெரிய நகரங்களில் சாலைகள் இருக்கின்றன. அவற்றை 4 பகுதிகளாக பிரித்து, அதிகமான மரங்கள் நடப்பட்டு, இன்றைக்கும் இருக்கிறதே, அதேமாதிரி அண்ணா சாலை போன்ற இடங்களிலே ஏற்கெனவே இருக்கிற மரங்களையாவது வெட்டாமல் இருப்பதற்கும் முடிந்த இடங்களிலெல்லாம் மரங்களை வைப்பதற்கும் அரசு தனியாக ஆலோசனை செய்து நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட வசதியான இடங்களில் மரங்கள் வைக்க வேண்டுமென்ற எண்ணத்தை இப்பொழுது மாநகராட்சி மன்றம் கொண்டிருக்கிறது. மாநகராட்சி மன்றத்திற்கு ஒரு யோசனையும் சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக, சிறு கன்றுகளாக வைத்துத் தண்ணீர் ஊற்றி வளர்ப்பதைவிட, ஒரு குறிப்பிட்ட இடத்திலோ, அல்லது பண்ணையிலோ, அல்லது தோட்டத்திலோ, 8 அடி, 10 அடி, 15 அடி உயரம் மரங்களை வளர்த்து விட்டபிறகு, அவற்றை வேரோடு பறித்துக்கொண்டுவந்து இந்தச் சாலைகளின் ஓரங்களில் நடுகின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த முயற்சியை மாநகராட்சி மன்றம் மேற்கொண்டிருக்கிறது. அந்த வகையிலே, நல்லவர் இருப்பதால், அவற்றை வேரோடு கொண்டுவந்து வைப்பதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த முயற்சியை மாநகராட்சி மன்றம் மேற்கொண்டிருக்கிறது.

Ambasamudram market.

* 302 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether it is a fact that it has been pointed out in the Audit Report that the President of the Ambasamudram Town Panchayat had not paid the licence fee of Rs. 1,050 for 1967–68 towards the market building owned by him and that the amount should be realised from him: and

(b) if so, the action taken thereon?

[1972 ஆகஸ்ட் 24

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) சம்பந்தப்பட்ட தணிக்கைத் தடை, உரிமக் கட்டணம் கட்டவில்லை என்பதைப்பற்றி இல்லை. தக்க பதிலுக்குப் பின்பு இந்த தணிக்கைத் தடையும் கூட நீக்கப்பட்டுள்ளது.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவர் அவர்களே, இது சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து தணிக்கையில் கண்டபடி, இந்த பணத்தை வசூல் செய்யவேண்டுமென்று ஒரு வேண்டுகோள் கூட்டம் போட்டு வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா? அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, திரு. ராஜலிங்க ராஜாவுக்குச் சொந்தமான மார்க்கெட்டுக்கு 1966-67-க்கான லைசென்ஸ் பாக்கி இருந்தது போலவும், 1967-68-க்கு அப்பொழுதிருந்த தலைவர் நடவடிக்கை எடுக்காதது போலவும் கருதப்படுகிறது. ஆனால், நிலைமை அப்படியல்ல. 1967-68-க்கு லட்சுமணனும் அவரது தோழர் வீரபத்திர மூப்பனரும் உரிமம் பெறுவதற்கு ரூ. 1,050 கட்டினார்கள். அப்பொழுது திரு. ராஜலிங்க ராஜா அவர்களும் உரிமம் பெற ரூ. 1,050 கட்டினார்கள். 17-3-1967-ம் நாளன்று உரிமத்தை, திரு. எல். பி. லட்சுமணனுக்கும் அவருடைய தோழர் வீரபத்திர மூப்பனருக்கும் அளிப்பது என்றும் உரிமம் அளிக்கப்படாத ராஜலிங்க ராஜாவுக்கு ரூ. 1,050-ஐ திருப்பிக் கொடுத்துவிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது அதற்கேற்ப ராஜலிங்க ராஜா கட்டிய பணம் திருப்பித் தரப்பட்டது. அது திருப்பித்தரப்பட வேண்டியதில்லையென்று தணிக்கைக் குழு சொல்லியது. இரண்டு பேரும் பணம் கட்டியதன் காரணமாகவும் ஒருவருக்கு உரிமம் அளிக்கப்பட்டதாலும் மற்றொருவருக்குப் பணம் திருப்பித் தரப்பட்டது என்று கூறப்பட்ட அந்த முடிவைத் தணிக்கைக் குழு ஏற்றுக்கொண்டது.

தமிழ்ப் பல்கலைக்கழகம்.

* 303 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனித் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?